இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation

2008

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி

Vettimaniy வெற்றிமணி

மணி -58

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A.(Hons)

ஓலை 07

யேர்மனியில் இருந்து வெளிவரும்
ஆன்மீகக் காலாண்டிதழ்

சிவத்தமிழ்

அறிவியலோடு ஒட்டிய ஆன்மீகக்
கட்டுரைகளை வரவேற்கின்றோம்

05 MAR 2009
PERIODICALS DIVISION

M.K.S.Sivakumaran
Bost...
58477 Lüdenscheid
Germany

மின்னஞ்சல்: Vettimaniy @hotmail.com

யேர்மனியில் வெற்றிமணி சர்வதேச விருது விழா

மாணவரரங்கில்...

தரம் 5 தேசிய பரீட்சையில்
(தமிழ் மொழி மூலம்)
முதலாம் இடம்



கலையரங்கில்...

விளையாட்டரங்கில்...

U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka

Ayngaran International

மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்

30, High Street, Collierswood, London SW19 2AB, UNITED KINGDOM

AYNGARAN

மாணவர் மனங்களில் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிமணி

Vettimaniy



ஸ்தாபகர்
அமரர் **மு. க. சுப்பிரமணியம்**

(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

கௌரவ ஆலோசகர்
காலநிதி மனோன்மணி
சண்முகதாஸ்

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
கலாநிதி
மு. க. சு. சிவகுமாரன் B.F.A.
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.

இணையாசிரியர்
திருமதி
வலன்ரீனா இளங்கோவன்
(B.A.Hons), Dip.in Edu.

Associate Editor
Mrs. Vlanteena Elangkovan,
(B.A.Hons), Dip.in Edu.

தொடர்புகளுக்கு:
தபால் பெட்டி ஒழுங்கை
பலாலிவீதி
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்
யாழ்ப்பாணம்

மக்கள் தொடர்பு:
திரு. சு. இளங்கோவன்
(Dip.in.S.Sc,Dip.in F.Sc, Dip. in S.M.)
(யாழ்ப்பாணம்)

வைத்திய கலாநிதி. கதிர்துரைசிங்கம்
(கனடா)

சமூகஜோதி த. புவனேந்திரன்
(ஜேர்மனி)

திரு. சஞ்சீவன் சிவகுமாரன் (B.Sc.Eng.)
(இங்கிலாந்து)

"வெற்றிமணிமொழி"

தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது

அரவிந்தர்

வெற்றிமணி ஒலி மீண்டும் ஒலிக்கத் தொடங்குகின்றது!

அன்பார்ந்த இனிய வாசகர்களே!

இன்று உங்கள் கரங்களில் தவழும் இந்த வெற்றிமணி மீண்டும் யாழ்ப்பாணத்தில் ஒலிக்கத் தொடங்கி யுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

மாணவர் பத்திரிகையாக வெளிவரும் வெற்றிமணியில் கட்டுரைகள், ஆக்கங்கள், செய்திகளில் சிறந்தவற்றை ஜேர்மனி, கனடா, இலண்டன் ஆகிய நாடுகளில் வெளிவரும் வெற்றிமணி பத்திரிகையிலும், அங்கு வெளிவரும் விடயங்களை யாழ்ப்பாண வெற்றிமணியிலும் வெளியிட்டு ஒரு இலக்கிய உறவுப் பாலத்தை அமைத்துள்ளது.

வெற்றிமணிக்கு இதுவரை காலமும் கட்டுரைகள், ஆக்கங்களை எழுதியும், செய்திகளை அனுப்பி உதவிய அனைவருக்கும் வெற்றிமணி தன் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிகிக்கின்றது. மேலும் "வெற்றிமணி" வாசகர்களே! பயன்தரும் விடயங்களை அளிப்பதும், பயன் பெறுவதும் இனி உங்கள் கைகளில்...

"வெற்றிமணியை" உங்கள் நண்பர்களுக்கும்
அறிமுகம் செய்யுங்கள்.

திருமதி வலன்ரீனா இளங்கோவன்
வெற்றிமணி இணை ஆசிரியர்.

தீபாவளித் திருநாள் குறித்து அமெரிக்க பாராளுமன்றத்தில் தீர்மானம்

"நல்ல சக்திகளின் வெற்றியைக் கொண்டாடும் பண்டிகை இது"

அமெரிக்காவில் இந்தியாவில் இருந்து சென்ற இந்துக்கள் அதிகளவில் இருக்கிறார்கள். அவர்கள் ஆண்டு தோறும் தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருகிறார்கள். ஆண்டுதோறும் தீபாவளித் திருநாளை இந்தியாவிலும், உலகம் முழவதும் பல்வேறு நாடுகளிலும் வசிக்கும் இந்தியர்களாலும் கொண்டாடப்படு கிறது.

இந்தநிலையில் தீபாவளித் திருநாளைப் பெருமைப்படுத்தும் வகையில் அமெரிக்க பாராளு மன்றத்தில் ஒரு தீர்மானம் சென்ற ஆண்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. தீபாவளி குறித்து இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படுவது இதுவே முதல் முறை ஆகும். தீர்மானம் எண் 747 என்று கூறப்படும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக 358 உறுப்பினர் கள் ஓட்டுப்போட்டனர். எதிர்த்து யாரும் ஓட்டுப்போட வில்லை. ஆனால் 66 பேர் ஓட்டு எடுப்பில் கலந்து கொள்ளாமல் புறக்கணித்தனர்.

அங்கீகாரம்

இந்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தவர் களுள் ஒருவர் ஜோ வில்சன். இவர் தெற்கு கரோலினா குடியரசுக்கட்சி உறுப்பினர். இந்தியா ஆதரவு பாராளு மன்ற குழுவின் இணைத்தலைவரும் ஆவார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தீபாவளியின் சரித் திர மற்றும் மதரீதியான முக்கியத்துவத்தை அங்கீ கரித்து இப்படி ஒரு தீர்மானம் கொண்டுவரப்பட்டது எனக்குச் சந்தோஷமாக இருக்கிறது. அமெரிக்காவில் உள்ள 20 லட்சம் இந்துக்களும், சீக்கியர்களும், பவுத் தர்களும், சமணர்களும் இந்தப் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். இந்தத் திருநாள் 5 நாட்கள் கொண்டாடப்படுகிறது. நல்ல சக்திகளின் வெற்றியைக்

கொண்டாடும் பண்டிகை இது" என்று அவர் குறிப்பிட்டி ருக்கிறார்.

தீபாவளித் திருநாளின் சர்வதேச முக்கியத்துவத்தை யும், மத மற்றும் சரித்திர முக்கியத்துவத்தையும் என் தீர்மா னம் அங்கீகரிக்கிறது. இந்தத் தீர்மானம் இருநாடுகளி டையே வலுவான உறவு வளர்வதற்கு உதவும் என்றும் அவர் அந்த அறிக்கையில் கூறியிருக்கிறார்.

சோதனைகள்தான் சாதனைகளைப் படைக்கின்றன!

1914 டிசம்பர் மாதம் ஒரு பெரிய தீவிபத்தில் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி தாமஸ் ஆல்வா எடிசன்னின் ஆராய்ச்சிக்கூடம் முழு வதும் எரிந்துபோயிற்று.

கிட்டத்தட்ட 20 லட்சம் டலர்கள் நட்டம். அப்போது எடிசனுக்கு வயது அறுபத்தியேழு. இத்துடன் எடிசனின் ஆராய்ச்சிகள் யாவும் முடிவுற்றன என்றே எல்லோரும் நினைத்தனர்.

ஆனால்!

எடிசன் அப்படி நினைக்கவில்லை. தீவிபத்தைப் பற்றி பத்திரிகையாளர் கள் கேட்டபோது அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"இது ஒரு வகையில் நல்லது என்றே நினைக்கின்றேன். அந்த ஆராய்ச்சிக் கூடத்தில் நிறையத்தவறுகள் செய்தி ருக்கின்றோம். அதெல்லாம் எரிந்து போய்விட்டன. இனி புதிதாக எல்லா வற்றையும் தொடங்கலாம்". சொன்ன தோடு நிற்கவில்லை எடிசன். மூன்றே வாரத்தில் ஃபோனோ கிராமைக் கண்டுபிடித்தார்.

நீதி: கெட்டதிலும் நல்லதைத்தேடுபவன் புத்திசாலி

வாழ்த்துக்கள்
உஷாந்தினி கதிரவேல்

யாழ் மாவட்டம் மீசாலையைப் பிறப்பிட மாகவும் யேர்மன் ஹம் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் கமலா தேவியின் மகள் கதிரவேல் உசாந்தினி 3 வயதில் யேர்மனி சென்று அங்கு கல்வி பயின்று பின்னர் இங்கிலாந்து சென்று கல்வியில் University of Durham B.Sc Bri Medical Science, University of Nottingham M.Sc Medical Genehics with Distinction பேறுகள் பெற்றார். இவரை அம்மா சகோதரர்கள் மற்றும் உற்றார், உறவினர்க ளுடன் வெற்றிமணியும் மாணவியின் கல்வி மேலும் உயர்ந்தோங்க வாழ்த்துகின்றது.

பேசுகிறவன் விதைக்கின்றான் கேட்பவன் அறுவடை செய்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நிஜமாகிப்போன நிழல்கள்

மோனலிசா

லியனோர்டா டாவின்சி

ஓவிய, சிற்பக் கலைஞர்கள் என்றதும் ஒய்யாரமாய் ஒழிவு மறைவின்றி அழகை, அதுவும் பெண்களின் அழகை வரைபவர்கள், அல்லது அணு அணுவாய்ச் செதுக்குபவர்கள் என்று எண்ணும் வண்ணம் சில படைப்புக்கள் இருந்தாலும் அதற்கப்பால்.... அவர்களது நுண்ணறிவு எவ்வளவு தூரம் இந்த உலகைப் படம் பிடித்துள்ளது என்பதனை நாம் உணரவேண்டும்.

பழமையைப் பேணி இந்தக் கணனியுகம் வரை காத்து எமக்குக் கையளித்த பெருமை இவர்களுடையது அல்லவா.

சிற்பங்களும் ஓவியங்களும் சில சிற்றின்பத்தைச் சுற்றி நின்றாலும் அதனுள் புதைந்து கிடக்கும் கோலங்கள் பல அக்காலத்தின் பதிவுகளாகவே உள்ளன.ஆடைகள் முதல் மனிதகுலத்தின் ஆசைகள் வரை படம்பிடித்துக் காட்டுபவை அவை.

ஓவியன் அகமும், புறமும் படம்பிடிப்பவன் அதனாற்தான் ஒரு டாவின்சியால் மோனலிசாவின் ஓவியத்தைத் தரமுடிந்தது. இன்று வரை அந்த புன்னகையின் அர்த்தம் புரியாது தடுமாறுகின்றனர். நரம்பியல் நிபுணர்கள் முதல் நாடி பார்க்கும் வைத்தியர் வரை அந்தப் புன்னகைக்கு அர்த்தம் காணாத் துடித்துக் கொண்டு இருக்கின்றனர்.

எதிர்காலத்தில் நடக்கவேண்டியவற்றிற்கு நம்பிக்கையுடன் உருக்கொடுக்க நுண்ணறிவும் கற்பனைத்திறனும் அவசியம். அவையின்றி எதனையும் புதிதாக உருவாக்க முடியாது.

பறவையைக் கண்டான் விமானம் படைத்தான் என்றால் அந்த விமானத்திற்குரிய வடிவத்தை விஞ்ஞான ஆய்வுகள் எதுவுமே நடைபெறாத இற்றைக்கு 500 ஆண்டுகளுக்கு முன்னரே



வரைந்து காட்டியவர் ஓவியர் டாவின்சி. அது மட்டுமல்ல ஒரு குழந்தை தாயின் வயிற்றில் எப்படி இருக்கும் என்பதனை முதன் முதல் வரைந்து காட்டிய வரும் அவரேதான்.

அதுமட்டுமல்ல விமானம் கண்டு பிடிப்பதற்கு முன்னரே விமானத்தை வரைந்து அதில் இருந்து குதிக்கும் பரசூட் எனப்படும் பாதுகாப்புக் குடையையும் வரைந்து 500 ஆண்டுகளுக்கு முன்னரே இன்று வாழ்வபர்களுக்கு உரிய பார்வையையும் அறிவையும் முன்கூட்டியே பெற்றிருந்தவர் அந்த மாபெரும் ஓவியர்.

மனிதனின் உடற்கூறுகளை துல்லியமாக வரைந்து தள்ளியவர் அவர்.

மேலை நாடுகளில் ஓவியம் ஒரு பிரதானமான பாடமாகத் திகழ்வதற்கான காரணம், அதனை ஒரு கலையாக மட்டும் பார்க்காமல் அதனுள் புதைந்து கிடக்கும் நுண்ணறிவுத்திறன், ஆக்கசக்திகளுக்கான களஞ்சியம் என்று அதனை நோக்குகின்றனர்.

ஒரு உண்மையான ஓவியன் ஒரு சமூக வைத்தியன், சிறந்த சிற்பி,பெரும் கவிஞன், தத்துவமேதை, விஞ்ஞானி என அவனது தூரிகை பல உண்மை வடிவங்களைத் துலக்கிய வண்ணம் இருக்கும்.





இதற்கு உதாரணமாக வாழ்ந்தவர் லியனோர்டா டாவின்சி ஆவார். இவர் 15..4.1452 இத்தாலியில் பளோரன் நகர் அருகே இருக்கும் வின்ஸி என்ற கிராமத்தில் பிறந்தார். 1503 ஆண்ட மோனலிசா என்ற மர்மப் புன்னகை அரசியின் ஓவியத்தை வரைந்தார். 02.05.1519 காலமானார். தன்வாழ் நாள் முழுவதும் மனித குலம் இன்று அனுபவிக்கும் சுகங்களுக்கான சூத்திரதாரியாக விளங்கினார்.

ஒரு பறவையின் மீன்பிடிக்கும் நுட்பம்

மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு வலையை உபயோகிக்கின்றனர். இதுபோல் ஒரு பறவையும் (Pelikan) மீன்பிடிப்பதற்கு இயற்கையாக ஒரு பையுடன் பிறந்துள்ளது.

இப்பறவையின் கழுத்தில் ஒரு பை அமைந்துள்ளது. பறவை கடலில் மூழ்கி சொண்டினை நீருள்விட்டு தனது பையை நீரால் நிரப்பும். அப்போது நீருடன் சேர்ந்து மீன்களும் அப்பையினை அடைந்து விடும். பின்னர் தன்சொண்டினை நிமிர்த்தி நீரினை வெளியேற்ற மீன்கள்மட்டும் பையில் சிக்கிக்கொள்ளும். அடேங்கப்பா என்ன அற்புதப்படைப்பு இந்தப்பறவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது ஆதரவில்

மாணவர் அரங்கம்

JET TRAVELS

குழுக்களாக ஐரோப்பிய நாடுகள், இந்தியா, இலங்கைப் பயணத்திற்கு...

சகல நாடுகளுக்கும் குறைந்த செலவில் திருப்தியுடன் பறந்து செல்ல நாடுங்கள்.

Sivam

4429 Sheppard Avenue East,
Scarborough, Ontario M1S 1V3-Canada

உலக சமய நூல்கள்

1.	நால்வேதங்கள்	வடமொழி	இந்துசமயம்
2.	திரிபிடகம்	பாளிமொழி	பௌத்தமதம்
3.	பைபிள்	லத்தீன்	கிறிஸ்தவம்
4.	குர்ஆன்	அரபுமொழி	இஸ்லாமியம்
5.	ஜண்ட் அவெஸ்தா	பாரசீகம்	அவெஸ்தா மதம்

பா. லால்கரன்
13 (கலை)
யா/ இணுவில் மத்திய கல்லூரி.

அறிந்து கொள்ளுங்கள்

	நூல்கள்	ஆசிரியர்கள்
1.	இராமாயணம் (வடமொழி)	வான்மீகி
2.	இராமாயணம் (தமிழ்மொழி)	கம்பர்
3.	மகாபாரதம் (வடமொழி)	வியாசர்
4.	மகாபாரதம் (தமிழ்மொழி)	வில்லிபுத்தூரர்
5.	நளவெண்பா	புகழேந்தி
6.	சிலப்பதிகாரம்	இளங்கோடிவகள்
7.	மணிமேகலை	சீத்தலைச் சாத்தனார்
8.	வளையாபதி	பரிமேலழகர்
9.	குண்டலகேசி	நாவகுப்தர்
10.	சீவகசிந்தாமணி	திருத்தக்கதேவர்

ச. பவிதா
12 கலை
யா / வயாவிளான் ம.ம.வி.

தெரிந்து கொள்ளுங்கள்

1. தன்வாழ்நாளில் ஒருமுறை பூக்கும் தாவரம் – *மோனர் சார்பிக்*
2. ஆங்கில அகராதியை முதலில் தயாரித்தவர் – *சாமுவேல் ஜாக்சன்*
3. எவரெஸ்ற் சிகரத்தில் ஏறிய முதல் இந்தியப் பெண் – *பச்சேந்திரி பாய்*
4. கோப்பிப் பயிர்ச்செய்கையை முதல் ஆரம்பித்த நாடு – *அபசீனியா*
5. பெர்லின் சுவர் கட்டப்பட்டது – *1961ஆம் ஆண்டு*

த. அகலியா
தரம் - 10B
யா / இந்து மகளிர் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

உங்களுக்குத் தெரியுமா?

உலகில்...

1. பரப்பில் கூடிய நாடு – இங்கிலாந்து
2. மிகப்பெரிய மாளிகை – வத்திக்கான் மாளிகை
3. மிகப்பெரிய வானொலி நிலையம் – பி.பி.சி. (லண்டன்)
4. மிகப்பெரிய வானொலி கீதம் உள்ளநாடு – கிரேக்கம் (128 வரிகள்)
5. மிகப்பெரிய ஏரி – சுப்பீரியன் ஏரி

எஸ். சுகந்தா
12 (கலை) 2008
மு/மல்லாவி மத்திய கல்லூரி,
மல்லாவி.

வாழ்க்கையில் மூன்று

மதிப்பளிக்கவேண்டிய மூன்று	– இறைமை, முதமை, விதி
விரும்பவேண்டிய மூன்று	– தூய்மை, நேர்மை, வாய்மை
பாராட்டவேண்டிய மூன்று	– அழகு, அறிவு, குணம்
வைத்துக்கொள்ளவேண்டிய மூன்று	– அஞ்சாமை, ஊக்கம், திருப்தி
காப்பாற்றவேண்டிய மூன்று	– செல்வாக்கு, நட்பு, பற்று
விலக்கவேண்டிய மூன்று	– புகைத்தல், மதுஅருந்துதல், சூது விளையாடல்
கட்டுப்படுத்தவேண்டிய மூன்று	– நாக்கு, உணர்ச்சி, இச்சை
கவனிக்கவேண்டிய மூன்று	– பேச்சு, நடத்தை, செயல்
ஒழிக்கவேண்டிய மூன்று	– சோம்பல், பொய், புறக்கணித்தல்

ப. கம்சா
13 கலை
யா / கொக்குவில் இந்துக் கல்லூரி.

கல்வி

கல்வி என்னும் போர்க்களத்தில்
பேனா என்னும் ஆயுதமேந்தி
மையென்னும் இரத்தம் சிந்தி
வெற்றி கொள்வோம்.

பெ. மடுராஜன்
தரம் - 11
மன் / பற்றிமா ம.ம.வி.
பேசாலை – மன்னார்.

வெற்றிக்களிப்பில் யா / மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.

யா / மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய மாணவன் த.பாசுபதன் தேசியமட்ட புலமைப் பரிசில் பரீட்சை (தரம் - 5) தமிழ் மொழி மூல மாணவர்களுள் முதல் மாணவனாக, 176 புள்ளிகளைப்பெற்று முதல்வனானான். செய்தி கேட்டு அப்பாடசாலைச் சமூகம் மட்டுமல்ல தென்மராட்சியே மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தது.

இச்செய்தியை அறிந்த ஆரம்பப்பிரிவு உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ். ஸ்ரீஸ்கந்தராசா பாடசாலைக்கு விரைந்து மாணவன் பாசுபதனை அள்ளித்தூக்கி அரவணைத்து பாராட்டினார். படத்தில் அதிபர் கே.சிவானந்தனும் மாணவனை தூக்கியவாறு உதவிக்கல்விப் பணிப்பாளரும் காணப்படுகின்றனர். பாசுபதனுக்கு வெற்றிமணி மாணவர் அரங்கு தனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித இனப் பெருக்கத்திலும் விஞ்ஞானம் விளையாடுகிறது!

பெண்கள் மலடா, அது அந்தக்காலம்!

திரு.பொ.கனகசபாபதி
(முன்னாள் மகாஜனாக்கல்லூரி அதிபர்)

25- 07- 2008 இந்நாள் இனப்பெருக்கத் தொழில் நுட்பத்திலே ஒரு முக்கியான நாளின் நினைவு தினம். இதே தினத்தில் தான் 30 வருடங்களுக்கு முன்னர் (in- vitro fertilization) புறக் கருக்கட்டல் மூலம் கருக் கட்டப் பட்டுப் பின்னர் ஒரு தாயினது கருப்பையில் விருத்தியுறு மாறு பதிக்கப்பட்ட (implantation) முதற் குழந்தை

பிறந்தது.

இந்த முயற்சி சிறிது சலசலப்பினையும் பெரிய சர்ச்சையையும் கிழப்பிவிட்டது. இப்பொறி முறை யினுக்குச் சமயவாதிகளினுடையதும் ஒழுக்கவி யலாளரதும் எதிர்ப்பு எழுந்தபோதிலும் பிள்ளை பெற்றுக்கொள்ளமுடியாத பல குடும்பத்தவரின் உளவருத்தத்திற்குத் தீர்வுகாணக் காரணமாக அமைந்தது.

யாரோ பெற்றபிள்ளை ஒன்றினைத் தத்து எடுப்ப திலும் பார்க்க தானே ஒரு பிள்ளையைப் பெற்று வளர்ப்பதற்கு இது உதவிற்று. சுயமாகக் கருத்தரிப் பதில் கணவனுக்கோ மனைவிக்கோ குறைபாடு இருக்குமாயின், நன்கொடை வழங்கி ஒருவரிடம் தேவையான புணரிக் கலங்களைப் (முட்டை அல்லது விந்து) பெற்று புறக்கருக் கட்டல் மூலமாகபிள்ளை பெறுவதற்கு வாய்ப் பளித்தது. அது மாத்திரமல்லாமல் முதன் முறையாக ஈன்றாள் (surrogate) எனும் இன்னோர் வகையான தாயினையும் உருவாக்குதற்கு வழிவகுத்தது. இங்கே நான் ஈன்றாள் என அழைப்பது முட்டைக்கு உரிமை கோராது வெறும் வாடகைக் கருப்பையினை மாத்திரம் வழங்கி அங்கே சிசு விருத்தியுறுவதற்கு உதவிய நல்லிதயம் கொண்ட பெண்ணினையே.

இனப்பெருக்கத் தொழில் நுட்பத்தின் அடுத்த கட்டம் என்ன?

பத்திரிகைகளில் வந்த சில செய்திகளுக்கு சில ஆலாபனைகளும், நிரவல்களும் செய்து தந்துள் ளேன்.

பெண்கள் மலடா, அது அந்தக்காலம்!

பெண்களின் சூலகம் மாதம் ஒவ்வொரு முறையும் தவறாமல் சூல் / முட்டையை உருவாக்கி உதிர்த்து விடு கிறது. முட்டை உருவாகையில் சூலகத்தின் புடைப்புக் கலங்களினால் சூழப்பட்டு அவற்றினால் பெரிக் கப்படுவதன் மூலம் வளர்ச்சியடைந்து இறுதியில் அந்தப் புடைப்புக் கலங்களினால் ஆன உறை வெடிக் கின்ற போது உதிர்க்கப்படுகிறது.

அப்படி உதிர்க்கப்பட்ட சூல் / முட்டை சூலகக் கான் ஊடாக கீழே இறங்கி வருகின்ற பொழுது தான் கருக் கட்டல் நடைபெறுகிறது.

கருக்கட்டிய முட்டை கருப்பையினது சுவரிலே தன்னைப் பதித்த பின்னர் மேற்கேண்டு விருத்தியடை கிறது. இது மாதா மாதம் நடைபெறக் கூடிய நிகழ்ச்சி.

ஒரு பெண் சூலினை மாதாமாதம் உதிர்க்கத் தொடர்ந்து தவறினால், அவளை மலடு என்பார்கள். அவர்கள் விரும்பினால் புறக் கருக்கட்டல் மூலம் கர்ப்பம் தரிக்க முனையலாம். அதற்கு யாராவது ஒரு பெண்ணிடம் முட்டை பெறவேண்டி உள்ளது.

அண்மையில் மொன்றியால் நகரத்தின் ஆய் வாளர்கள் பிரான்சினைச் சேர்ந்த ஒரு குழுவின ருடன் நடத்திய ஆய்வின் முடிவுகள் மிகவும் உற்சாகம் அளிப்பவையாக உள்ளன.

அவர்கள் முட்டையாகத்தினை நடத்துதற்குக் காரணமான பரம்பரை அலகு ஒன்றினை இனம் கண்டுள்ளனர். உடலின் எல்லா இயக்கங்களும் பரம்பரை அலகுகளாலேயே கட்டுப்படுத்தப் படுகின்றன என்பது உலகறிந்த உண்மை. (ஆனால் சிலருக்குப் பரம்பரை அலகு என்பது இந்தியக் கலைச் சொல் அகராதியின் படி மரபு அணு என்பது தெரியாமல் இருக்கலாம்) ஆனால் எந்தப் பரம்பரை அலகு எந்தத் தொழிலைக் கட்டுப்படுத்துகிறது என்பது முழுமையாக இன்னும் அறிந்த பாடில்லை. இந்தப் பரம்பரை அலகினைப் வரைபடமாக்கல் (Genetical mapping) நடந்து கொண்டேயிருக்கின்றது.

விரைவில் எந்தப் பரம்பரை அலகு எத் தொழிலி னைப் புரிகிறது என்பது திட்டவட்டமாகத் தெரிந்து விடும். அது வரை..

ஆகவே முட்டையாக்கத்தினைக் கட்டுப்படுத்தும் பரம்பரை அலகினைக் இனம் கண்டுள்ளது ஒரு பெரிய சாதனையே தான்!!



அப்போ அடுத்த கட்டம் தான் என்ன? இந்தப் பரம் பரை அலகுகளின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தக் கூடிய மருந்துகளை கண்டுபிடித்தல் அவசியமாகிறது. நிச்சயமாக அடுத்த 30 வருடங்களில் அத்தகைய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுவிடலாம் என்பது உறுதி. இப்பரைம்பரை அலகின் செயற்பாட்டினை ஊக்குவிதால் மலட்டுத்தன்மையைக் குறைத்து விட முடியும். இப்பரம்பரை அலகின் செயற்பாடுகளை செயல்படுத்தும் மருந்து கண்டுபிடிக்கப்பட்டால் இன்னொரு விதமான வாய்ப்பும் உள்ளது.

பரம்பரை அலகின் செயரபாடுகளை ஊக்கு வித்தால் சூலகத்தில் இருந்து முட்டைகளைத் தோற்று விக்க முடியும். அதே சமயம் மருந்துகள் மூலம் பரம் பரை அலகின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தினால் சூலகம் முட்டைகளை உருவாக்குவதை நிறுத்த முடியும். இதன் காரணமாகக் கருக்கட்டல் குறைகிறது. கருத்தடை பிரயோகிக்கப்படுகிறது. எனவே மருந்து தயாரிக்கும் நிறுவனங்கள் வேகமாக இரண்டு வகை யான மருந்துகளையும் கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடவுள்ளன. விரைவில் வெற்றிக் சங்கினை ஊதுவார்கள் என்பது நிசம்.

தாய்கூடத் தேவையில்லை என்றாக்கி விட்டது தண்டுக் கலம்:

அடுத்த 30 ஆண்டுகளில் முட்டைக்கும் விந்து வுக்கும் எங்கேயும் போகத் தேவையில்லை, வெறும் ஆய்கூடம் ஒன்றிற்குப் போனால் மாத்திரம் போதும் என்ற நிலை ஏற்படலாம். யாரும் எந்த வயதிலும் பிள்ளை பெற்றுக் கொள்ளலாம். தண்டுக் கலங்கள் (stem cells) பற்றி நாம் ஏற்கனவே கூறியுள்ளோம் நீங்களும் ஊடகங்கள் மூலமாக நிறையவே தெரிந்திருப்பீர்கள். இத் தண்டுக் கலங்கள் பன்முகத் திறமை உடையவை

(Pluripotent-IPS). தண்டுக் கலங்கள் ஆரம்பத்திலே இழகு தன்மையில் இருப்புதுதான் இதற்கான கார ணம். மனித உடலிலே நரம்புக்கலம், செங்குழியம், தசைக் கலம், என்புக்கலம் என 220 வெவ்வேறு வகையான உடற் கலங்கள் உள்ளன. அதில் எந்த விதமான கலத்தினையும் எமது தோலிலே உள்ள ஒரு கலத்தினைச் செயற்படுத்தி உருவாக்க முடியுமென ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆகவே தண்டுக் கலத்திலிருந்து ஆய்கூடத்திலே விந்துவை யும் முட்டையினையும் உருவாக்கமுடியும். பின்னர் அவை இரண்டினையும் கருக்கட்ட வைத்தால் ஒரு நுகமும் அது விருத்தியுற்ற முளையமும் உருவாகி பின்னர் அதனைக் கருப்பையில் உட்பத்திதததும் அது விருத்தியினை மேற்கொண்டு சிசுவாகலாம். இந்தத் தண்டுக் கலத்திற்கு எங்கு போவதாம்? ஒரு விதமான பிரச்சினையும் இல்லை! ஒரு வரிடமும் போகத் தேவை யில்லை. தோலில் காணப்படும் கலங்களையே தண்டுக் கலங்களாக்கலாம் சிரமம் இல்லாமல். ஆகவே அடுத்த தலைமுறையினர் கொஞ்சம் கவன மாக இருக்க வேண்டும் போலத் தெரிகிறது. முழுக் கை சேட்டு அல்லது கோட் சூட்டுடன் தான் உலாவ வேண் டும். யாராவது சற்றுப் பிறாண்டி தோலில் ஒரு சில கலங்களை கொண்டுபோனால் மோசம் வந்துவிட லாம் அல்லாவா?.

முளைவகையாக்கல் (cloning) பற்றி ஏற்கனவே நீங்கள் அறிந்திருப்பீர்கள். டொல்லி என்கிற செம்மறி ஆடு பிறந்த கதை உங்களுக்கு அத்துபடியாக இருக்க லாம் அல்லது ஏதோ கனவில் கேட்டது போன்ற ஞாப கம் வரலாம். டொல்லியும் மண்ணுலக வாழ்க்கையை முடித்துக் கொண்டு போய்விட்டது.

டொல்லியும் தோற்கலம் ஒன்றில் இருந்தே உரு வாக்கப்பட்டது. ஆனால் செய்முறைதான் வித்தியாசம். ஒரு ஆட்டினது பால்மடியில் உள்ள கலம் ஒன்றினை எடுத்து அதன் கருவினை மாத்திரம் உபயோகித்தார் கள் ஆய்வளர்கள்.

ஆடு ஒன்றினது முட்டையின் கருவினை அகற்றி விட்டு இந்தக் கருவினை முட்டையுள்ளே புகுத்தி அத னைப் பின்னர் ஆட்டின் கருப்பையினிலே உட்பதித்து விருத்தியுற வைத்தார்கள். இங்கே விந்து உபயோகிக் கப்படவில்லை. தோற்கலத்தின் கரு மாத்திரம் உபயோ கிக்கப்பட்டது.

— உலகில் அதி உயரமான பாலம் —



பிரான்ஸ் நாட்டில் உலகிலேயே மிக உயரமான பாலம் ஒன்று டார்ன் நதிப்பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்டு பர்சிலோனா செல்வதற்குரிய நேரம் மிகக்குறைக்கப்பட்டது. இப்பாலத்தின் உயரம் (பள்ளத்தாக்கில்) 343 மீற்றர். உலக அதிசயமான Eiffel Tower 324 மீற்றர். அதாவது இப்பாலம் ஈபில் கோபுரத்தைவிட 19 மீற்றர் இன்னும் உயரமானது. பாலத்தின் நீளம் 2.46 கி.மீற்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேர்மனியில் வெற்றிமணி சர்வதேச விருது விழா

விருந்தினர்களையும் கலைஞர்களையும் டிசில்டோவ் விமான நிலையத்தில் வெற்றிமணி வரவேற்கிறது.

வெற்றிமணி விருது விழா யேர்மனியில் மணிக்கு முன்னுரிமைகொடுத்த நிறைவான விழா. மணி அதுதான் நேரம். சரியாக 23.08.2008 சனிக்கிழமை 03.50 கம்நகரில் Friedensschule மண்டபத்தில் மக்கள் திரண்டிருக்க ஆரம்பமானது.

விழாவிற்கு வைத்திய கலாநிதி கதிர்.துரை சிங்கம் (கனடா) தலைமை தாங்க பிரதம விருந்தினராக யாழ்ப்பாணத்தில் இருந்து வருகை தந்த திரு.சின்னத்துரை தயாபரன் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பொறியிலாளார்) அவர்களும், சிறப்பு விருந்தினராக யாழ் வெற்றிமணி இணை ஆசிரியரும் கொக்குவில் இந்துக்கல்லூரி ஆசிரியையுமான திருமதி வலன்ரீனா இளங்கோவன் அவர்களும் வருகைதந்து சிறப்பித்தனர்.

இவர்களுடன் யேர்மனி கம் நகர பிதா Mr.Thomas Hunsteger Petermann. வெற்றி மணியும் அதன் வெளியீடு களையும் சிறப்புறப் பதிக் கும் அச்சக முகாமையாளர் கள் Mr. Frank Seltmann. Arno Seltmann ஆகியோரும் கலந்து விழாவிற்கு மெருகூட்டினர்.

'காதல் வேகம்" நம்மவர் களின் புதிய பரிமாணம்!

விழாவின் ஆரம்ப நிகழ் ச்சிகளாக சிறுவர்பேச்சும் பரதமும் இடம்பெற்றது. அத னைத் தொடர்ந்து லண்ட னில் இருந்த வருகை தந்த சஞ்ஜே சிவகுமாரன் சொந்தமாய் இசையமைத்து கவிவடித்துப்பாடிய 'காதல் வேகம்" நிகழ்ச்சி இடம்பெற்றது.

சஞ்ஜேயுடன் Dr.ரோகினி சதீஸ் அவர்களும் கலந்து கொண்டு அரைமணி நேரம் இரசிகர்களை ஆனந்ததந்தில் மூழ்கடித்தனர்.

வெற்றிமணி கல்வியிலும் கலையிலும் சிறந்து விளங்கியவர்களுக்கு விருதுகள்கொடுத்து சிறப்பித்தது.

அடுத்து கனடாவில் 24 மணிநேரம் தொடர்ந்து பாடிச் சாதனை படைத்த பாரதி கலைக்கோயில் வழங்கிய இசை நிகழ்ச்சி தேன் மழையாய்ப் பொழிந்தது. விழா முடியும் வரை எவரும் எழவில்லை. பார்வையாளர்களை இசையும், அறிவுப்பும் அப்படியே தம்மோடு வைத்திருந்ததைக் காணமுடிந தது. பாரதி கலைக்கோயில் இசை நிகழ்ச்சிக்கு திரு. ஆறுமுகம் தயாபரன் அவர்கள் அளவாக அழகாக அறிவிப்புக்களைச் செய்ய இசை வெள்ளம் தடையின்றிப் பாய்ந்தது.

மேடையில் அத்தனைவாத்தியக் கருவிகளையும் கலைஞர்களையும் காணும்போது எந்த விமானம் இவர்களை கனடாவில் இருந்து யேர்மனிக்கு ஏற்றி வந்தது என வியப்புறத் தோன்றியது. அதற்கு விடையாக கனடா ஜெற் ரவல் சிவம் அவர்கள் அங்கு அடக்கத்துடன் புன்னகைத்து நின்றார்.

கலை நிகழ்சிகளில் செல்வி ஒலிவியா தனபால சங்கம், செல்வி தமிழினி தேசிங்குராஜா அவர்களது பரதமும் மனங்களைக் கொள்ளை கொண்டன.

சுறுசுறுப்பான பேச்சுடன் இயல்பாக பேசி அரங்கை தம்பால் வைத்திருந்த அறிவிப்பாளர் கள் செல்வி அசோகா சிவநாயகம், செல்வி.ராஜி. ராஜமனோகரன், இவர்களைப் பாராட்டாமல் இருக்க முடியாது.

விழாவின் நிகழ்ச்சி ஒழுங்குகளை சிறப்பாக ஒழுங கமைத்து வடிவம் கொடுத்தவர்கள் செல்வி. டயானி ராஜமனோகரன், திருமதி ஜனனி சஞ்ஜீவன்.

சிறப்பு விருந்தினராக இலங்கையில் இருந்து வருகைதந்த வலன்ரீனா இளங்கோவன் எழுதிய யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள் என்னும் நூல் அங்கு வெற்றிமணியின் 17 வது வெளியீடாக வெளிவந்தது.

விழாமுடிந்து செல்பவர்கள் சொல்லக் கேட்டது 'இப்படி விழாக்கள் என்றால் தொலைக்காட்சியை விட்டு தொலைவில் இருந்தும் வரலாம் "என்பது தான். விழா சரியாக 09.59 க்கு முடிவுற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாஸன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம் (முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி)



தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியின் செல்வி சண்முகராசா தனுஷா 17 வயதுப்பிரிவு கோலூன்றிப் பாய்தலில் 1ம் இடம் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார்.



தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டியில் மகாஜனக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் ம. பார்த்தீபன் 21வயதுப் பிரிவு தட்டெறிதலில் இரண்டாம் இடத்தைப் (வெள்ளிப் பதக்கம்) பெற்றுக் கொண்டார்.

தேசிய மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்ட ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி அணியினரையும். அதிபர். பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம்.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டிகளில் யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 15 வயது. 19 வயது அணியினர் முதலிடம் பெற்றுத் திரும்பியபோது சீரணி அம்பாள் ஆலய முன்றலில் குதூகலமாக வரவேற்கப்படுகின்றனர். அதிபர் திரு. வ. ஸ்ரீகாந்தன். பிரதி அதிபர் திரு. இ. ஆனந்த நடராசா ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றார்.

மலேசிய மண்ணில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணியினர் பொறுப்பாசிரியர் திருமதி ஜெ. ஜெயந்தியுடன் காணப்படுகின்றனர்.



வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வன்மைப் போட்டிகளில் யா / கொக்குவில் இந்துக் கல்லூரியிலிருந்து பங்குபற்றி முதலாம். இரண்டாம் இடங்களைப் பெற்ற மாணவர்களை முதலாவது படத்திலும். இரண்டாவது படத்தில் மாகாண மட்டத்தில் கூடைப்பந்தாட்டத்தில் பங்குபற்றி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்ட அணியினரையும். அதிபர் திரு. அ. அகிலதாஸ் மற்றும் பொறுப்பாசிரியர்களையும் படத்தில் காணலாம்.

விளையாட்டு உள்ளத்தைப் பண்படுத்துகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றா ஆதரவில்

கலை அரங்கம்

யா/மத்திய கல்லூரியின் நாட்டிய சாதனைகள்

மாகாணமட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற மீனவ நடனம்

யாழ்ப்பாணத்தின் பிரபல ஆண்கள் பாடசாலையான மத்திய கல்லூரியில் 29.06.2004இல் அன்றைய அதிபரால் நடனம் ஒரு பாடமாக முதன் முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. அன்று முதல் இன்று வரை ஆசிரியர் திரு. லி. அனிருத் தன் அவர்கள் நடன ஆசிரியராக இருந்து கல்லூரியின் கலை வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்து பெரும் சாதனைகளை கல்லூரிக்கு ஈட்டித் தந்துள்ளார். இவரது முயற்சியால் 2005ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் குழுநடனம் (மீனவ நடனம்) மாகாண மட்டத்தில் இரண்டாமிடத்தைப் பெற்றது. 2006ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த் தினப் போட்டியிலும் (கோலாட்டம்) தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து 2007ம் ஆண்டிலும் குழு நடனம் (வாள்) அகில இலங்கை ரீதியில் முதலாமிடத்தைப் பெற்றது. இவ்வாண்டில் தனி நடனம் பிரிவு 2இல் செல்வன் கௌதமன் அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். 2008ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியிலும் குழு நடனம் (கோலாட்டம்) மாகாண மட்டத்தில் முதலாமிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு யாழ் மத்திய கல்லூரி நடனத்தில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்துக் கொண்டமைக்கு ஆசிரியர் திரு. லி. அனிருத்தன் அவர்களுடைய பெரு முயற்சியே காரணமாக அமைகின்றது. இவ் ஆசிரியரின் திறமையைப் பாராட்டி ஊர்காவற்றுறை கலாசாரப் பேரவையினர் கலைஞான சுரபி என்னும் பட்டம் வழங்கி கௌரவித்தமையும், கோப்பாய் வீடியோ கலாமினியினர் செல்வன் கௌதமன் அவர்களையும், வாள் நடனக் குழுவினரையும் பாராட்டிக் கௌரவித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மத்திய கல்லூரியின் கலை வளர்ச்சி மேன்மேலும் சிறப்புற வெற்றிமணி தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றது.

ஆலயமும் நாட்டியமும்

நடன ஆசிரியை கலாநிதி வானதி தேசிங்குராஜா

இந்து சமயத்திற்கும் கலைகளுக்கும் இடையே பிரிக்கமுடியாத தொடர்பு நிலவி வந்துள்ளது. இறைவனை வழிபடும் முறையினைக் கொண்ட வழிபாட்டு முறைகள் வைதிக மரபுகளை ஒட்டியவையாயினும் இவற்றில் ஏதோ ஒரு வகையில் கலைகள் இடம்பெறுதல் தெளிவு.

வேதாகம முறைப்படி கோயில்கள் அமைக்கப்பட்ட பின்னர் கலைகளின் களமாக அவை திகழ ஆரம்பித்தன. ஆகவே கோயில்கள் சமய உணர்வினையும், அறிவையும் புகட்டும் நிலையங்களாக மட்டுமன்றி கவின்கலை மையங் களாகவும் மிளிரவாயின. கோயில்களில் காணப்படும் சிற் பங்கள், ஓவியங்கள், கிரியைகள் முதலியவற்றில் கவின் கலைகள் குறிப்பாக இசையும், நடனமும் முக்கிய இடத் தைப் பெறுகின்றது.

கோயிலிலே குடிகொண்டிருக்கும் இறைவன் கலைஞருக் கும், பக்தருக்கும் தனிப்பெரும் கலை வடிவமாகவும், கலைப் புரவலனாகவும், கலை ஞானியாகவும் காட்சியளிப் பான். இதற்கு நடராஜர் வடிவமே ஓர் எடுத்துக்காட்டு. சிலப் பதிகார நாயகி மாதவியாடிய பதினொருவகை ஆடல் கள் பல்வேறு கடவுளர் ஆடியவை என்பது எடுத்துக் காட்டு. இத்தகைய கோயில்களிலே அக்கடவுளர்க் குரிய கலை ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் காட்டும் ஓவியங்களும் இடம்பெறலாயின. வாய்ப்பாட் டிசையும், வாத்திய இசையும், நிர்தன கணபதி, வீணாதார தட்சனாமூர்த்தி, வீணையினை ஏந்தி வாசிக்கும் சரஸ்வதி, சிவபிரானின் 108 கரணங்கள், கண்ணனின் வேய்ங்குழல் பற்றிய சிற்பங்களை குறிப்பிடலாம். கோயில் அமைப்பிலே நிருத்த மண் படம் என்ற ஒரு பகுதி நடனத்திற்காக ஒதுக்கப்பட் டிருந்தது. கலை வடிவினனாய், கலைப்பிரியனாய், கலை ஆதரவாளனாள் இலங்கும் இறைவனை வழிபாடு செய்யும் முறைகளிலே கலைகளும் குறிப் பிடப் பாலன. மலரினாலும், இலைகளினாலும், மனத் தினாலும் வழிபடுதல் போன்று இசையினாலும், நடனத்தினாலும் இறைவனை வழிபடும் முறை நன்கு போற்றப்பட்டது.

தேசியமட்டப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்ற வாள் நடனம்

தேசியமட்ட நடனப் போட்டியில் முதலிடம் பெற்ற மாணவன் க.கௌதமனும் ஆசிரியர் திரு.லி.அனிருத்தனும்

யேர்மனியில் யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள் நூல் வெளியீடு

மாகாணமட்டத் தமிழ்த்தின இசை நாடகப் போட்டியில் (அரிச்சந்திர மயான காண்பம்) முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்ட யா/இணுவில் மத்திய கல்லூரி நாடகக் குழுவினரைப் படத்தில் காணலாம்.

யா / கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை திருமதி வலன்ரீனா இளங்கோவன் எழுதிய "யாழ்ப்பாணத்து நாட்டிய மரபுகள்" எனும் நூல் வெளியீட்டு விழா அண்மையில் யேர் மனியில் "ஹம்" நகரில் "வெற்றிமணி" சமூகத்தாலும், "டோட் மூண்ட்" நகரில் கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினராலும் வெளியிடப்பட்டது.

மேற்படி ஆசிரியரின் ஆய்வுநூல் பற்றி வாழ்நாள் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் குறிப்பிடுகையில் யாழ்ப்பாணத்து கலைவரலாற்றில் ஒரு முக்கிய பகுதியினை இந்நூல் விபரிக்கின் றது என்றும், தான் அறிந்த வரையில் யாழ்ப்பாணத்து சின்னமேள மரபு பற்றிய விரிவான தகவல்களை இவ்வாய்வே முதன் முதலில் வெளிக்கொணர்ந்துள்ளது என்றும், இந்நூலுக்கான தரவுகளை இந்நூலாசிரியர் மிகவும் சிரமப்பட்டுச் சேர்த்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளதுடன், இவ் ஆய்வினை நூலாக வெளியிடவேண்டும் என்று இவ்வாய்வு எழுதப்பட்ட நாள் முதலே (1994) தான் வற்புறுத்தி வந்துள்ளேன் என்றும், இதனை இப்போது நூலுருவில் பார்க்கும்போது மிகுந்த திருப்தி ஏற் படுகின்றது எனவும் குறிப்பிட்டு, இந் நல் முயற்சிக்கு கைகொடுத்த வெற்றிமணியைப் பாராட் டுவதாகவும் குறிப்பிட்டார்.


ANDRA
DIGITAL IMAGE
உயர் கணனி வடிவமைப்பில்
டிஜிற்றல் போஸ்ட் மகசீன் வகைகள்
பிளெக்ஸ் பனர்கள் லேபிள்கள்
ADORNA CARDS
www.andradesigns.com
மிகக் குறைந்த விலையில் உயர்தரமான
திருமண அழைப்பிதழ்கள்
யாழ் நகரில் முதன் முறையாக இணையத்தளத்தினூடாக உயர்தரமான திருமண அழைப்பிதழ்கள்...
இணையத்தள முகவரி: www.andradesigns.com
நேரடியாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
356A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
6D.கே.கே.எஸ் வீதி, உப்புமடம் சந்தி, கோண்டாவில்.
021-4590268
021-222 8929
கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
Printed by: ANDRA DIGITAL IMAGE TP: 021-4590268